(See Rule 42)

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Cr.P.C)

**IN THE COURT OF I ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT, CUDDALORE**

**Sessions Case No. 338 of 2018**

Deposition of ....... witness for .................. Prosecution........**P.W.5**

Defence

Court

| | |
|---|---|
| Name | பிச்சைப்பிள்ளை |
| Husband name | |
| Village | |
| Taluk | |
| Caste | |
| Calling | |
| Religion | இந்து |
| Age | |

Solemnly affirmed in accordance with the Provisions of the Oaths Act 1969 ( Central Act 44 of 1969) on **Thursday the 7th day of August 2025.**

(G.SARASWATHI) Signature of the witness.

NAME OF THE JUDGE :

Solemnly affirmed in accordance with the Provisions of the Oaths Act 1969 ( Central Act 44 of 1969) on **Thursday the 7th day of August 2025.**

**1, 3, 4 ,5 எதிரிகள் ஆஜர். 2 வது எதிரி P.T Warrant மூலம் ஆஜர் செய்யப்பட்டார். 6, 7 எதிரிகள் ஆஜர் இல்லை அதற்கான மனு அனுமதிக்கப்பட்டது.**

**முதல்விசாரணை**

நான் தாண்டவங்குப்பத்தில் வசிக்கிறேன். இறந்த சசிக்குமார் எனக்கு மாமன் உறவு. சசிக்குமார் மீது நிறைய வழக்குகள் உண்டு. ஆஜர் எதிரிகளை தெரியாது. சுமார் 2 , 3 வருடங்களுக்கு முன்பு நான் வீட்டில் தூங்கிக்கொண்டிருந்தபோது சுமார் 01.00 மணியளவில் சத்தம் கேட்டு வெளியில் வந்து பார்த்தபோது சசிக்குமார் இரத்த வெள்ளத்தில் கிடந்தார். மறுநாள் முண்டியம்பாக்கம் மருத்துவமனைக்கு சசிக்குமாரின் பிரேதத்தை பார்க்க சென்றேன். அங்கு போலிசார் பிரேதத்தின் மீது விசாரணை செய்தார்கள். வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>** :

இல்லை என வழக்கறிஞர் தெரிவித்தார்.

*Typed to my dictation in open Court, read over and interpreted to the Witness. Admitted and acknowledged by him/ her to be Correct.*

*I Additional District Judge*
*Cuddalore.*

Judicial Form No.53

(See Rule 42)

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Cr.P.C)

**IN THE COURT OF I ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT, CUDDALORE**

**Sessions** **Case No. 338 of 2018**

Deposition of ....... witness for .................. Prosecution........**P.W.4**

Defence

Court

| | |
|---|---|
| Name | கிருஷ்ணமூர்த்தி |
| Husband name | |
| Village | |
| Taluk | |
| Caste | |
| Calling | |
| Religion | இந்து |
| Age | |

Solemnly affirmed in accordance with the Provisions of the Oaths Act 1969 ( Central Act 44 of 1969) on **Thursday the 7th day of August 2025.**

(G.SARASWATHI) Signature of the witness.

NAME OF THE JUDGE :

Solemnly affirmed in accordance with the Provisions of the Oaths Act 1969 ( Central Act 44 of 1969) on **Thursday the 7th day of August 2025.**

**1, 3, 4 ,5 எதிரிகள் ஆஜர். 2 வது எதிரி P.T Warrant மூலம் ஆஜர் செய்யப்பட்டார். 6, 7 எதிரிகள் ஆஜர் இல்லை அதற்கான மனு அனுமதிக்கப்பட்டது.**

**<u>முதல்விசாரணை</u>**

எனக்கு சொந்த ஊர் நெய்வேலி. நான் பைப் லைன் போடும் தொழில் செய்கிறேன். இறந்த சசிக்குமாரை எனக்கு தெரியும். ஆஜர் எதிரிகளை பார்த்தது கிடையாது. ஈரோடு பவாணியில் இருந்தபோது சசிக்குமார் இறந்துவிட்டதாக அழகர் என்பவர் தொலை பேசியில் என்னிடம் தகவல் சொன்னார். சுமார் 6, 7 வருடங்களுக்கு முன்பாக தகவல் சொன்னார். சசிக்குமார் எனக்கு தாய் மாமன் மகன். சசிக்குமாரை வெட்டி கொன்றுவிட்டதாக கேள்விப்பட்டேன். யார் வெட்டினார்கள் என்று எனக்கு தெரியாது.

**(அரசு தரப்பு வழக்கறிஞர், பிறழ் சாட்சியாக பாவித்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரியதன் பேரில், அனுமதி அளிக்கப்பட்டு, அரசு தரப்பில் சாட்சி குறுக்குவிசாரணை செய்யப்படுகிறார்).**

**<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை</u>**

சசிக்குமார் மீது ஊரில் வம்பு வளர்த்து நிறைய வழக்குகள் நிலுவையில் இருந்தது என்றால் தெரியாது. சம்பவ சமயத்தில் ஒரு வழக்கில் கைதாகி ஜாமினில் வெளியே இருந்தார் என்றால் தெரியாது. எதிரிகளுக்கும், சசிக்குமாருக்கும் இடையே இருந்த முன் விரோதம் பற்றி எனக்கு தெரியாது. கடந்த 09.04.2018 ஆம் தேதி இரவு சசிக்குமாரின் அம்மா மற்றும் அண்ணன் சசிக்குமாரை யாரோ வெட்டுகிறார்கள் என்று சத்தம்போட நான் என் வீட்டிலிருந்து வெளியே வந்து டார்ச் வெளிச்சத்தில் பார்த்தபோது எதிரிகள் கையில் கத்தி மற்றும் வீச்சருவாள் போன்ற ஆயுதங்கள் வைத்துக்கொண்டு சசிக்குமாரை சரமாரியாக வெட்டிவிட்டு தப்பி விட்டார்கள் என்று போலிஸ் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. காவல் நிலையத்தில் யார் புகார் கொடுத்தார் என்று எனக்கு தெரியாது. நான் எதிரிகள் சசிக்குமாரை வெட்டுவதை பார்த்ததாகச் சொல்லிவிட்டு தற்போது எதிரிகளுக்கு பயந்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

இல்லை என வழக்கறிஞர் தெரிவித்தார்.

*Typed to my dictation in open Court, read over and interpreted to the Witness. Admitted and acknowledged by him/ her to be Correct.*

*I Additional District Judge*
*Cuddalore.*

Judicial Form No.53

(See Rule 42)

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Cr.P.C)

**IN THE COURT OF I ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT, CUDDALORE**

**Sessions** **Case No. 338 of 2018**

Deposition of ....... witness for ................. Prosecution........**P.W.3**

Defence

Court

| | |
|---|---|
| Name | மணிகண்டன் |
| Husband name | |
| Village | |
| Taluk | |
| Caste | |
| Calling | |
| Religion | இந்து |
| Age | |

Solemnly affirmed in accordance with the Provisions of the Oaths Act 1969 ( Central Act 44 of 1969) on **Thursday the 7th day of August 2025.**

(G.SARASWATHI) Signature of the witness.

NAME OF THE JUDGE :

Solemnly affirmed in accordance with the Provisions of the Oaths Act 1969 ( Central Act 44 of 1969) on **Thursday the 7th day of August 2025.**

**1, 3, 4 ,5 எதிரிகள் ஆஜர். 2 வது எதிரி P.T Warrant மூலம் ஆஜர் செய்யப்பட்டார். 6, 7 எதிரிகள் ஆஜர் இல்லை அதற்கான மனு அனுமதிக்கப்பட்டது.**

## முதல்விசாரணை

நான் ஓடை தாண்டவங்குப்பத்தில் வசிக்கிறேன். நான் வேன் மற்றும் கார் ஓட்டுநராக பணிபுரிகிறேன். இறந்த சசிக்குமாரை எனக்கு தெரியும். அவர் என் பக்கத்துவீட்டுக்காரர். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியாது. 2018 ஆம் வருடம் இரவு சுமார் 11.30 – 12.00 மணிக்கு சசிக்குமாரை வெட்டிவிட்டதாக அவரது அண்ணன் வேல்முருகனும் அவரது அம்மாவும் அலறியடித்துக்கொண்டுவந்து சொன்னார்கள். அவர்கள் சொன்ன சமயத்தில் நான் எனது வீட்டில் இருந்தேன். சசிக்குமாரை வெட்டியதாக சொல்லப்படும் வீட்டிலிருந்து நான் இருக்கும் வீடு ஒரு கிலோ மீட்டர் தொலைவு இருக்கும். யார் சசிக்குமாரை வெட்டினார்கள் என்று நான் பார்க்கவில்லை.

**(அரசு தரப்பு வழக்கறிஞர், பிறழ் சாட்சியாக பாவித்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரியதன் பேரில், அனுமதி அளிக்கப்பட்டு, அரசு தரப்பில் சாட்சி குறுக்குவிசாரணை செய்யப்படுகிறார்).**

## அரசு தரப்பு குறுக்கு விசாரணை

சசிக்குமார் மீது ஊரில் வம்பு வளர்த்து நிறைய வழக்குகள் நிலுவையில் இருந்தது என்றால் சரிதான். சம்பவ சமயத்தில் ஒரு வழக்கில் கைதாகி ஜாமினில் வெளியே இருந்தார் என்றால் சரிதான். எதிரிகளுக்கும், சசிக்குமாருக்கும் இடையே இருந்த முன் விரோதம் பற்றி எனக்கு தெரியாது. கடந்த 09.04.2018 ஆம் தேதி இரவு சசிக்குமாரின் அம்மா மற்றும் அண்ணன் சசிக்குமாரை யாரோ வெட்டுகிறார்கள் என்று சத்தம்போட நான் என் வீட்டிலிருந்து வெளியே வந்து டார்ச் வெளிச்சத்தில் பார்த்தபோது எதிரிகள் கையில் கத்தி மற்றும் வீச்சருவாள் போன்ற ஆயுதங்கள் வைத்துக்கொண்டு சசிக்குமாரை சரமாரியாக வெட்டிவிட்டு தப்பி விட்டார்கள் என்று போலிஸ் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. சம்பவம் சம்மந்தமாக சசிக்குமாரின் அண்ணன் வேல்முருகன் தெர்மல்

காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார் என்றால் சரிதான். நான் எதிரிகள் சசிக்குமாரை வெட்டுவதை பார்த்ததாகச் சொல்லிவிட்டு தற்போது எதிரிகளுக்கு பயந்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

சசிக்குமாரும், அவரது அண்ணன் மற்றும் அம்மாவும் எனது வீட்டிற்கு பக்கத்தில் குடியிருந்தார்கள் என்றால் சரிதான். எனது வீடும், இறந்த சசிக்குமார் வெட்டுப்பட்டு கிடந்த இடமும் ஒரு கிலோ மீட்டர் தொலைவு இருக்கும். சசிக்குமாரின் அண்ணனும், அம்மாவும் அவரது (சசிக்குமாரின்) வீட்டின் வெளியே இருந்து கத்தினார்கள். அவர்கள் கூச்சலிட்ட இடமும் என் வீடும் பக்கத்தில் உள்ளது என்றால் சரிதான். அவர்கள் கத்திக்கொண்டு சென்றபோது ஊர் மக்களும் நானும் சென்றோம். ஒரு கிலோ மீட்டர் தொலைவில் உள்ள தாண்டவம் குப்பம் S-பிளாக் என்ற இடத்தில் சசிக்குமார் வெட்டுப்பட்டு கிடந்ததை பார்த்தேன். நான் அங்கே போகும்போது போலிசார் இருந்தார்கள். போலிசார்தான் வெட்டுப்பட்டுக்கிடந்த சசிக்குமாரை மருத்துவமனைக்கு அனுப்பினார்கள். மறுநாள் காலை 07.00 மணியளவில் சசிக்குமாரின் அண்ணன் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார். புகார் கொடுக்க நானும் உடன் சென்றேன்.

**மறுவிசாரணை** - இல்லை

*Typed to my dictation in open Court, read over and interpreted to the Witness. Admitted and acknowledged by him / her to be Correct.*

*I Additional District Judge*
*Cuddalore.*